# மான்மின் செய்திகள்

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St., Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471Email: manminnewsasia@gmail.com

## தேவனுடைய அன்பும் ஆசீர்வாதங்களும் இங்கே இருக்கின்றன!

### 30வது ஆண்டுவிழா ஆராதனையும், கொண்டாட்ட கலைநிகழ்ச்சியும்






















மான்மின் மத்திய திருச்சபை 30 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டு எண்ணற்ற ஆத்துமாக்களை ஜீவ வார்த்தையுடன் அற்புத அடையாளங்களை வெளிப்படுத்தி இரட்சிப்பின் பாதைக்கு வழி நடத்துகிற மகா–பெரிய திருச்சபையாக வளர்ந்திருக்கிறது. அக்டோபர் 7, 2012 அன்று நம் திருச்சபை 30வது ஆண்டுவிழா கொண்டாட்டத்துடன் ஒரு புதிய துவக்கத்தை ஏற்படுத்தியது. கொண்டாட்ட நிகழ்விலிருந்த ஒரு பிரம்மாண்டமான மேடை, பறக்கும் கம்பியுடனான நடனம், லேசர் கதிர்கள் ஆகியன உணர்வுகளுக்கு கூடுதல் அம்சமாக இருந்தது. அது GCN தொலைக்காட்சி மற்றும் இணையதளத்தின் வழியாக நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. ■ படம் 1: தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ■ படம் 2: அறிவர் ஃபாராங் ரைட், தேசிய மத ஒளிபரப்பாளர்களின் தலைவர் ■ படம் 3: கொண்டாட்ட நிகழ்வு, "பரலோகமும் பூலோகமும்" ■ படம் 4: வெளிப்புற புகைப்படம் பிடிக்கும் இடம் ■ படம் 5–7: கொண்டாட்ட முன் நிகழ்ச்சிகள், "தேவனுக்கு மகிமை".

அக்டோபர் 7, 2012 அன்று, மான்மின் மத்திய திருச்சபை தனது 30வது ஆண்டு விழாவை ஏறத்தாள 10,000 கிளை மற்றும் இணை சபைகளுடன் இணைந்து கொண்டாடியது.

ஞாயிறு காலை ஆராதனையில் தலைமை போதகர். ஜேராக் லீ அவர்கள் "தேவன் நேசிக்கும் திருச்சபை: பரலோகம்" என்ற தலைப்பில் ஏசாயா 60:1–3ன் அடிப்படையில் பிரசங்கித்தார். அவர் தேவன் இத்திருச்சபைக்கு பரலோகத்தை காண்பித்துள்ளார் என்று கூறினார். அதாவது, கடந்த 30 வருடங்களாக, ஜீவ வார்த்தையின் மூலமாகவும், தேவனுடைய வல்லமை மற்றும் ஆவிக்குரிய மண்டலத்தின் பரம அழகை வெளிப்படுத்தும் உயர் தரமான கலாச்சார கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும், தேவன் தமது மகா பெரிய அன்பை விளங்கப் பண்ணியிருக்கிறார் என்று கூறலாம்.

பின் 30வது ஆண்டு விழா ஆராதனையில் அவர், "தேவன் நேசிக்கும் திருச்சபை: பூமி" என்ற தலைப்பின்கீழ் ஏசாயா 60:1–3 லிருந்து எடுத்து பிரசங்கம் செய்தார். அவர் பூமியில் வாழ்கிற நமக்கு பரலோகத்தில் நடக்கும் காரியங்களை தேவன் ஏன் காண்பித்தார் என்றால், பரிசுத்தமாகுதலின் வளர்ச்சி கிரமத்தின் மூலமாகவும் பாடுகளின் மூலமாகவும் அவருடைய சாயலை வெளிப்படுத்துகிற ஆவிக்குரிய மனிதர்களாக நம்மை மறுரூபப்படுத்துவதற்காகவே என்ற காரணத்தை குறிப்பிட்டார்.

ஆராதனை வேளையில் அறிவர். ஃபராங் ரைட், தேசிய மத ஒளிபரப்பாளர்களின் தலைவர், வாழ்த்து செய்தி கொடுத்தார். அவர், "இன்றைய நாட்களில் அநேக திருச்சபைகள் பயந்து இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க தயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், மான்மின் மத்திய திருச்சபை, தேவனுடைய வல்லமையின் மூலமாக முழு உலகத்திற்கும் அவருடைய நாமத்தை தைரியமாய் பிரகடனப்படுத்துகிற ஒரு ஆச்சர்யமான விசேஷித்த சபையாய் இருக்கிறது" என்று கூறினார்.

போதகர். ஜோங் மான் லீ, கிறிஸ்தவ உலக எழுப்புதல் பணி ஐக்கிய தலைவர் ஆராதனையின் முடிவில் ஆசீர்வாத ஜெபத்தை கூறினார். பின் "பரலோகமும் பூலோகமும்" என்ற தலைப்பின்கீழ் 30வது ஆண்டு விழா கொண்டாட்டம் தொடர்ந்தது. திருச்சபையின் கலைநிகழ்ச்சி குழுவினர் திருச்சபையை இந்த 30வது ஆண்டுவிழா வரைக்கும் வழிநடத்திய தேவனுடைய அன்பை வெளிப்படுத்தினர். தேவனளித்த பாடல்களுடன், நிகழ்ச்சிகளானது, பரலோக சேனை, தூதர்கள் மற்றும் பண்படுத்துதலின் பரிசுத்தமாகுதல் வளர்ச்சி கிரமத்தின்கீழ் சென்ற பூலோக மக்களின் இருதய நறுமணத்தை பிரதிபலித்தது. கிட்டத்தட்ட 60 நிமிடங்கள் நடைப்பெற்ற நிகழ்ச்சியை வெளிப்படுத்துவதில் அலுவலக ஊழியர்கள் உட்பட 500–க்கும் அதிகமானோர் பங்கு பெற்றனர்.

பல்கேரியாவிலிருந்து வந்த அறிவர். கிரில் ஸ்வேலி நோவ், "அசாதாரணமான நிகழ்ச்சியினால் நான் ஆழமாக அசைக்கப்பட்டேன். அது தேவனுடைய பிரசன்னத்தில் நிகழ்த்தப்பட்டது என நிச்சயமாயிருக்கிறேன்" என்று கூறினார். போதகர். ட்சாய் ஃபாங் லியு, "நான் பரலோக அழகை உணர்ந்தேன், பரலோகத்திற்கான வலிய வாஞ்சை எனக்கு வந்தது. மக்களுக்குள் பரலோகத்திற்கான நம்பிக்கையை நடுகிற இப்படிப்பட்ட ஆடம்பரமான அழகான நிகழ்ச்சிகள் உலகம் முழுவதிலும் விஸ்தாரமாக பரவ வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மான்மின் அங்கத்தினர்கள் பரலோகத்தின் தூய்மையான அழகான நறுமணத்தை உணர்ந்து, ருசிபார்த்து சதாகாலமும் புதிய எருசலேமில் திரியேக தேவனுடன் வாழ்வதற்காக சீக்கிரம் பரிசுத்தமாக வேண்டும் என தீர்மானத்தை எடுத்துக்கொண்டனர். இந்த ஞாயிறு ஆண்டு விழா நிகழ்வு, கொரியாவில் உள்ளும் வெளியேயும் இருந்து வந்த கிறிஸ்தவ பத்திரிக்கையாளர்கள், பல்வேறு அரசியல் மற்றும் மத துறையிலிருந்து வந்த கனத்திற்குரிய விருந்தினர்கள் மற்றும் முந்தைய கருத்தரங்குகளில் பங்கு பெற்ற உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் இணைப்பின் அங்கத்தினர்கள் உட்பட பல விருந்தினர்களால் பங்கு பெறப்பட்டது. சிலர் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தும், சீனாவிலிருந்தும், ஜெர்மானியாவிலிருந்தும், பெருவிலிருந்தும் பிரயாணப்பட்டு வந்திருந்தனர். திருச்சபையின் முன் பிரகாரத்தில் பல வகையான வித்தியாசமான உணவு வகைள் கொடுக்கப்பட்டன. வெளிப்புற புகைப்பட இடம் ஒன்று அங்கத்தினர்களுக்காகவும், விருந்தினர்களுக்காகவும் கட்டப்பட்டது. அது அவர்களது மகிழ்ச்சிக்கு கூடுதலாக அமைந்தது.

அக்டோபர் 5, 2012 அன்று, வெள்ளி முழு–இரவு ஆராதனையின் வேளையில், திருச்சபையின் வாராந்திர ஒளிப்பரப்பு செய்தியான மான்மின் செய்தியில் விசேஷித்த வீடியோ காட்சி "விசுவாசத்தின் நடை" என்ற தலைப்பின்கீழ் காட்டப்பட்டது. அது தேவனுடைய வழிநடத்துதலால் மட்டுமே அதிவேக வளர்ச்சியடைந்த மான்மினின் 30 வருட சரித்திரத்தை காட்டியது. ஆராதனையின் இரண்டாம் பகுதியில் கலைநிகழ்ச்சி குழுவினர் "தேவனுக்கு மகிமை" என்ற தலைப்பிடப்பட்ட நிகழ்ச்சியை வெளிப்படுத்திக் காட்டினர். ஆராதனைக்கு முன்னதாக, சிறுவர்களின் பவனி இசை குழுவினர் பரலோக மலர் படுக்கை போன்று அலங்கரிக்கப்பட்ட விசேஷித்த வெளிப்புற மேடையில் சிறப்பு நிகழ்ச்சிகளையும் கொடுத்தனர்.

தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள், "ஜூலை 2012ல் 30வது ஆண்டுவிழா திறப்பிலிருந்து, நாம் நம்முடைய ஆசீர்வாதங்களுக்காக நமது பாத்திரத்தை ஆயத்தம் செய்வதற்கான நேரத்தை பெற்றுக்கொண்டோம். மேலும், அந்த ஆசீர்வாதங்கள் நம் திருச்சபையின் மேலும் திருச்சபை அங்கத்தினர்கள் மேலும் முழு அளவாய் இந்த 30வது ஆண்டு விழாவிலிருந்து வரும்" என்று கூறினார். அவரது செய்தியின் மெய்தன்மையை மாபெரும் ஆசீர்வாதத்தை பெற்ற அங்கத்தினர் ஒருவரது சாட்சி ஆதாரமாக நிரூபித்தது.

# இவ்வுலகில் வெளிப்பட்ட தேவனுடைய அன்பு

**“எழும்பி, பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன் மேல் காணப்படும்; உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள்” (ஏசாயா 60:1–3).**

கடைசி காலத்தின் தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி இத்திருச்சபையின் சரித்திரத்தை தேவன் வழிநடத்தி கொண்டிருக்கிறார். ஒவ்வொரு க்ஷணத்தையும் அர்த்தமாக்காமல் எந்தவொரு க்ஷணப்பொழுதும் கடந்து போகவில்லை. சில நேரங்களில், ஒரு சூழ்நிலையை விட்டு வெளிவர பாதை ஏதும் நமக்கு இல்லாதது போல காணப்பட்டது. மேலும் மற்ற வேளைகளில் நாம் நன்கு அறியாத திசையில் நாம் போய் கொண்டிருப்பது போல காணப்பட்டது. ஆனால் எந்த சூழ்நிலையிலும் கர்த்தரில் நம்பிக்கை வைத்து, அவருடைய பிரசன்னம் நம்முடன் இருப்பதை நாம் உணர்ந்தோம். நாம் தேவனுடைய வழிநடத்துதலை ஒவ்வொரு அடிஅடியாக உணர்ந்தோம்.

கடந்த 30 வருடங்களாக தேவன் எவ்வாறு நம்முடன் இருந்து கொண்டு வந்தார் என்பதையும், நம் மூலமாக அவர் என்ன நிறைவேற்ற போகிறார் என்பதையும் பேச விரும்புகிறேன். இந்த செய்தியின் மூலமாக நீங்கள் அனைவரும் தேவனளித்த தரிசனத்தை நிறைவேற்றுவதில் அனலுள்ளவர்களாக மாறுவீர்கள் என நம்புகிறேன்.

### 1. பூலோகத்திற்குரியவர்களாக அல்ல பரலோகத்திற்குரிய மக்களாய் மாறுவதற்கு

அப்போஸ்தலனாகிய பவுல் பரலோகத்தின் பரதீசை கண்டு ஆவிக்குரிய மண்டலத்தை தன் இருதயத்தில் செதுக்கி வைத்தான். பரலோகத்தின் அழகையும் மகிமையையும் ஒருமுறை பார்த்ததால் மட்டும் தானே அவன், மாமீசம் எவ்வளவு அர்த்தமற்றதென்று அறிந்துணர்ந்து தன் மீந்த ஜீவிய நாட்களில் நித்தியமான பரலோகத்திற்குரியவைகளை ஆதாயப்படுத்துவதற்காகவே அர்ப்பணித்தான். தேவன், பவுல் மாத்திரமல்ல எல்லோரும் பரலோகத்திற்குரிய காரியங்களை அதாவது ஆவிக்குரிய காரியங்களை தேட வேண்டும் என விரும்புகிறார். அவர் அர்த்தமற்ற மாம்சீக காரியங்கள் அனைத்தையும் உதறி தள்ளிவிட்டு பரலோகத்திற்குரிய மக்களாக முன்வரும் தமது பிள்ளைகளுக்காக ஆவலுடன் காத்திருக்கிறார்.

கடந்த 30 ஆண்டுகளாக, இத்திருச்சபையில் தேவன் எண்ணற்ற பரலோக காரியங்களை காட்டியிருக்கிறார். ஆவிக்குரிய செய்திகளின் மூலமாக மனிதர்களால் அறிந்துகொள்ள முடியாத ஆவிக்குரிய மண்டலத்தை குறித்து நாம் அறிந்து கொள்ள செய்தார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இங்கு பிரசங்கிக்கப்படுகிற செய்திகளை உறுதிப்படுத்தும்படியாக, தேவனால் மாத்திரமே செய்யக்கூடிய வல்லமையான கிரியைகளை அவர் நிகழ்த்தினார். கூடுதலாக, நமக்கு அவர் அருளிய துதிபாடல்கள் மூலமாக, பிதாவாகிய தேவன் நம்மை அவரது இருதயத்தை அதிகமான உயிரோட்ட நிலையில் உணரச் செய்தார்.

செய்திகள் அனைத்தும், வல்லமையான கிரியைகள் அனைத்தும் துதிபாடல்களின் ராகங்களும் பல்லவிகளும் தேவனுடைய ஊக்கமான அன்பை உள்ளடக்கியுள்ளன. அவர் விசுவாசிகள் அனைவரும் பரலோகத்துக்குரிய மக்களாக நிச்சயம் மாறுவதற்கேதுவாக, அதைப் பார்த்து, கேட்டு இருதயத்தில் புரிந்துகொள்ள வேண்டும் என விரும்புகிறார்.

இத்திருச்சபையில் தேவன் பரலோக காரியங்களை வெளிப்படுத்தியிருந்தாலும்கூட, அவைதானே விசுவாசிகளை தானாகவே பரலோகத்திற்குரிய மக்களாக மாற்றி விட இயலாது. நீதியின்படி, ஒவ்வொரு தனிநபரும் புடமிடுதலின் வழியாக போவதற்கு நேரம் அவசியம். பரலோக ராஜ்யத்தை பலவந்தமாய் பிடித்துக்கொள்வதும் அவசியம். இயேசு அநேக அற்புதங்களை காண்பித்தார், ஆனால் அதைக் கண்ட யாவரும் இரட்சிக்கப்படவில்லை. மாபெரும் ஆச்சர்ய வல்லமை வெளிப்படுத்தப்பட்ட போதும், சில ஜனங்கள் அவரை புரிந்து கொள்ளாத காரணத்தால் அல்லது அவர் அவர்களுக்கு ஆதாயம் தரவில்லை என நினைத்ததால் இயேசுவை புறக்கணித்தனர்.

சில ஜனங்கள் ஆரம்பத்தில் அற்புத அடையாளங்களை கண்டு அவரை பின்பற்றினர், ஆனால் ஆழமான ஆவிக்குரிய செய்திகளை அவர்கள் கேட்டபோது, அவர்கள் ஸ்தம்பித்து அவரை விட்டு விலகினார்கள். இயேசுவோடு கூடவே இருந்த சீஷர்களும்கூட இயேசுவானவர் கைது செய்யப்பட்டு சிலுவையிலறையப்படும்படி எடுத்துச் செல்லப்பட்டபோது, தங்கள் ஜீவன் பயமுறுத்துதல்கள் நடுவில் இருப்பதை உணர்ந்ததால் ஒடி ஒளிந்து கொண்டனர். அவர்களில் ஒருவன் இயேசுவை மறுதலிக்கவும் செய்தான். ஆனால் புடமிடும் சோதனைகளின் காலங்களின் வழியாக போன பிற்பாடு, ஆண்டவரின் உயிர்த்தெழுதலை கண்டு பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளில் மிக விரைவாக மாறினர். அவர்கள் எந்தப் பயங்கரத்தில் அல்லது பயமுறுத்துதல்களிலும் சத்தியத்தை தைரியமாக பிரசங்கிக்கக்கூடிய பரலோகத்திற்குரிய மனிதர்களாய் மாறினர்.



தலைமை போதகர் டாக்டர். ஜேராக் லீ

தேவன் தாம் சர்வ வல்லமையுள்ளவராக இருப்பதால் மட்டுமே வல்லமையளித்து அவர்களை அப்போஸ்தலர்களாக அவர் மாற்றி விடல்லை. அவர்கள் இயேசுவின் வல்லமையை கண்டு அவரை நம்பினார்கள். ஆயினும், அவர்களுக்கு சுத்த பொன் போன்ற விசுவாசம் இருக்கும்வரைக்கும், ஒவ்வொருவரும் பாடுகளால் புடமிடப்படும் வளர்ச்சி கிரமத்தின்கீழ் கடந்துபோக வேண்டியிருந்தது.

### 2. தேவன் நம் திருச்சபை அங்கத்தினர்கள் உறுதியான விசுவாசத்தை பெற்றிருப்பதற்காக அவர்களுக்கென்று பயிற்சியின் நேரத்தை கொடுத்தார்

இன்றைக்கு உலகில் பல திருச்சபைகள் உள்ளன, பரிசுத்தமாகுதல் என்னும் இலக்கை தேடும் விசுவாசிகளை நாம் சிரமப்பட்டு தான் கண்டுபிடிக்க முடியும். வேதாகமம் நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என பல முறை கூறியிருக்கிறது (பார்க்கவும்: லேவி 20:26, 1பேதுரு 1:15–16, மத்தேயு 5:48). ஆனால் அதிகமான விசுவாசிகள், மனிதர்களால் பரிசுத்தமாகவே முடியாது என்றும் அவர்கள் பாவம் செய்யாமல் இருக்கவாவது முயற்சிக்கலாம் என்றும் எண்ணுகின்றனர். ஆகையால், அவர்களால் ஆவி, பூரண ஆவி என்ற கருத்தைகூட புரிந்துகொள்ள முடியாமல், அவிசுவாசிகள் மாம்சத்திற்குரிய மனுஷர்கள் என்றும், ஆண்டவரை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் ஆவிக்குரிய மனிதர்கள் என்றும் எண்ணுகின்றனர்.

ஆகவே, தேவன் இவ்வுலகத்தின் மக்களுக்கு பரிசுத்தத்தின் ஒரு உதாரணத்தை காட்டும்படியாக தம்முடைய அன்பான திருச்சபையை தெரிந்தெடுத்திருக்கிறார். உண்மையில், ஒரு சாதாரண அமைப்பில், ஒருவன் தனது விசுவாச வாழ்க்கையில் கடுமையாக முயற்சித்தாலும்கூட விசுவாசத்தின் கன்மலை மேல் நிற்பது என்பது எளிமை அல்ல. வேதாகமத்திலும்கூட, ஒரு தலைமுறை முழுவதிலும் ஒரு பூரண ஆவிக்குரிய மனிதன் வெளிவருவது எளிதல்ல. அடிப்படையாக, ஒரு நபருக்கு நல்ல உள்ளான இருதயம் இருக்கவேண்டும். தேவனுடைய விசேஷித்த குறுக்கிடுதலின் மூலமாக அவன் தன்னைக் குறித்து முழுவதுமாக அறிந்துணர்ந்து புடமிட்டு சுத்திகரிப்பிற்காக பாடுகளின் வளர்ச்சி கிரமத்தில் தன்னுடைய தற்பெருமையை உடைத்தெறிய வேண்டும்.

ஆனால், தேவன் நேசிக்கும் திருச்சபையின் அங்கத்தினர்களுக்கு அவர் விசேஷித்த கிருபை அளித்திருக்கிறார். அதாவது நம்முடைய உள்ளான இருதயத்தை மாற்றி, விரைவாக ஆவியை அடையப் பெறும்படிக்கு அவர் நமக்கு பயிற்சியின் காலத்தை தந்தார். இந்த திருச்சபையின் துவக்கத்திலிருந்து, அங்கத்தினர்கள் வல்லமையின் கிரியைகளை தொடர்ந்து கண்டு, ஜீவனுள்ள தேவனை குறித்து நிச்சயமுடையவர்களாய் இருந்தனர். ஒவ்வொரு வாரமும் தேவனுடைய வல்லமையான கிரியைகள் நடைபெறுவதை கண்டு, அவர்கள் ஆவியினால் நிரம்பியிருந்தனர். அவர்களது விசுவாசமும்கூட அதிவேகமாக வளர்ந்ததுபோல காணப்பட்டது.

ஆனால் கால காலத்தில் நம்முடைய விசுவாசத்தை பரிசோதிப்பதற்கு தேவன் திருப்புமுனைகளை வைத்திருந்தார். சமாதானமும் அமரிக்கையும் இருந்த நேரத்தில் நமக்குள் இருக்கும் அனைத்தும் சத்தியம் என்பது போல காணப்பட்டது. ஆனால் போராட்டங்களின் நேரத்தில் தான் சத்தியமும் பொய்யும் பகுத்தறிய கூடியதாய் இருந்தன.

சிறப்பான உதாரணங்களில் ஒன்று தான் 1998 மற்றும் 1999ல் இத்திருச்சபை கடந்து சென்ற பரீட்சைகள் ஆகும். மகாபெரிய பரீட்சையின் வலுமையான காற்றால், வெளிப்படையில் மட்டும் உண்மையுள்ளவர்களாக காணப்பட்ட அங்கத்தினர்கள் சுளகினால் புடைக்கப்படுவதினால் பிரிகின்ற கோதுமை, பதரை போன்ற சம்பவத்தின் நிலை போல பிரிக்கப்பட்டனர். வெளிப்பிரகாரமாக உண்மையுள்ளவர்களாக காட்சியளித்து தங்கள் இருதயத்தை சுத்திகரியாதவர்களும், தேவனுக்காக உள்ள தங்களது அன்பினால் பாவங்களை தூக்கி எறிந்து கொண்டிருந்தவர்களும் பிரிக்கப்பட்டனர். மனிதர்களுக்கு பயந்து உலகத்தோடு ஒத்த வேஷந்தரித்தவர்களும் தேவனுக்கு முன்பதாக தங்கள் நீதியை காத்து கொள்ள விசுவாசத்தில் உறுதியாய் இருந்தவர்களும் பிரிக்கப்பட்டனர். இந்த பரீட்சைகளின் நடுவில், திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் விசுவாசத்தை பரிசோதித்து புரிந்துகொள்ள ஒரு விலையேறப்பெற்ற வாய்ப்பு அவர்களுக்கு உண்டானது.

2000–ம் ஆண்டுகளில் பரீட்சைகள் முடிந்த பின்னர், தேவன் இத்திருச்சபையை முழுவீச்சாக உலகத்திற்கு போக அனுமதித்தார். தேவன் நம் திருச்சபை அங்கத்தினர்களின் விசுவாசத்தை அயல் நாட்டு படைமுயற்சி கூட்டங்களின் மூலமாக இன்னும் அதிகம் வளரச் செய்தார். ஆனால் காலத்தின் ஒரு குறிப்பிட்ட நேரத்திலிருந்து, விநோதமான ஒரு காரியம் நிகழ துவங்கியது. தேவனுடைய வல்லமை மாபெரிதாய் அதிகமதிகமாக வெளிப்பட துவங்கியது. ஆனால், சில தோற்றங்களில் திருச்சபையின் தனிப்பட்ட அங்கத்தினர்களின் விசுவாச வளர்ச்சி குறைந்து கொண்டிருந்தது.

பல அங்கத்தினர்கள் அவர்கள் ஆவியை வாஞ்சித்து கடினமாய் முயற்சித்தனர் என்றும் ஆயினும் ஏதோ ஒன்று சரியாக இல்லை என உணர்ந்ததாகவும் கூறினர். சிலர் பாவஅறிக்கை செய்து மனந்திரும்பி விட்டனர் என்று நினைத்தனர், ஆனால் கடந்த காலத்தில் உண்டாக்கின பாவமாகிய சுவர் முற்றிலும் அழிக்கப்படாததால் அவர்களது விசுவாச வளர்ச்சி குறைந்தது. வேறு சிலர், விசுவாசத்தில் ஊக்கமாயிருந்தனர். ஆனால் ஒரு குறிப்பிட்ட நேரத்திலிருந்து மீண்டும் உலகை நோக்கி பார்த்து, மரணத்திற்கு வழிநடத்தும் பாவங்களை செய்தனர். மற்ற சிலரால் பரத்திலிருந்து கிருபையும் பெலனும் பெற முடியவில்லை, ஆகவே பாவத்தைக் களைந்து போடும் வேகம் குறைந்தது, அவர்களது சுய–நீதியையும், சுய தோற்றமான எண்ணங்களையும் உடைத்தெறிவது அவர்களுக்கு எளிமையாக இல்லை.

இந்த தனிப்பட்ட பிரச்சனைகள் சரிப்படுத்தப்படும் வரையில், அவர்கள் ஆவிக்குரிய மண்டலத்தை குறித்து அதிகமாக கேட்டும் கண்டும் இருந்தாலும்கூட, அவர்களால் ஆவிக்குரிய மண்டலத்திற்குள் செல்ல முடியவில்லை. இப்பிரச்சனைக்கான வழிவாசல் தான் நமக்கு டிசம்பர் 25, 2010ல் மனந்திரும்புதலின் வாய்ப்பாக இருந்தது. ஆவிக்குரிய தேக்கத்தை ஏற்படுத்திய இந்த அடிப்படை பிரச்சனைகள் தீர்வுக்கு கொண்டு வரப்பட்டதாலும், பாவத்தின் சுவர்கள் உடைத்தெறியப்பட்டதாலும், அவர்கள் விசுவாசத்தின் வளர்ச்சியில் ஒரு மேன்மை பெற முடிந்தது. அவர்கள் தங்கள் இருதயத்தின் ஆழத்தில் தேவனுடைய அன்பை உணர்ந்தனர். ஆகவே அவர்கள் தங்கள் பாவங்களை மட்டும் அறிக்கை செய்யாது, விசுவாசத்தின் கன்மலையில் நிற்கவும், ஆவிக்குள்ளாக பூரண ஆவிக்குள்ளாகவும் வந்தனர். இது தான் இப்பூமியில் வெளிப்படுகின்ற தேவனுடைய அன்பு.

பிரியமான சகோதர சகோதரிகளே, சீக்கிரமாய் உங்களில் பலர் விசுவாசத்தின் கன்மலைமேல் நிற்பீர்கள், மேலும் உங்களது விசுவாசத்தின் சதவீதம் “ஆவிக்கு” அருகாமையில் வரும். அதன்பின் தான் நீங்கள் மாபெரும் கடமையான உலகளாவிய சுவிசேஷ வேலையையும், கானான் ஆலய கட்டுமான பணியையும் நிறைவேற்ற முடியும். பிதாவாகிய தேவன் கடந்த 30 ஆண்டுகளாக அது ஒரு நாள்போல நம்முடன் பொறுமையாய் இருந்து இந்தநாள் வரும்வரை காத்திருந்தார்.

நீங்கள் தேவனுடைய இந்த இருதயத்தை அறிந்துணர்ந்து, கடைசி கால கட்டத்தில் தேவனுடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு விலையேறப்பெற்ற கருவிகளாக விரைவாக பரிசுத்தத்தின் கனியாக மாறி முன்வருவீர்கள் என நம்புகிறேன்.

## விசுவாச அறிக்கை

1 மான்மின் மத்திய திருச்சபை, வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்டபரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.

2 மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியை களையும் நம்புகிறது. பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்

3 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால்மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.

4 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும்,பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.

5 மான்மின் மத்திய திருச்சபை, உறுப்பினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடி வரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை, "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து அதின் சொற்படியான உள்ளடகத்தை நம்புகின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)" அப்போஸ்தலர் (17:25).

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"
அப்போஸ்தலர் (4:12).

மான்மின் சர்வதேச பாடசாலை
இந்திய வளாகம்

Manmin International Seminary - India campus belongs to the United Holiness Church of Korea of which the chairman of the board of directors is Rev.Dr. Jaerock Lee. It is based on the fivefold Holiness gospel: Regeneration, Sanctification, Divine Healing, Resurrection, and Return of Christ.

DIPLOMA IN CHRISTIAN MINISTRY

(One year correspondence programme)

15D/41, Ponnankinaru Street, Villivakkam, Chennai - 600 049.
Tel:044-43554542, Email : indiamis@gmail.com

# மான்மின் மத்திய திருச்சபைக்கு கடந்து வந்தது என் வாழ்வில் மாபெரும் சந்தோஷமாயிருக்கிறது.



மான்மின் மத்திய திருச்சபை ஆதி திருச்சபையினர் போல தனது அழகான கிரியைகளுடன் தேவனை மகிமைப்படுத்துகிறது. அதன் எழுப்புதலும் வளர்ச்சியும் ஆச்சர்யமாயிருக்கின்றன. அறிவர்.ஜேராக் லீ அவர்களால் நடத்தப்படும் மான்மின் ஊழியங்களின் முதற்கண் அறிவைப்பெறும்படி, வெளிநாடுகளிலிருந்து மக்கள் பலர் திருச்சபைக்கு வந்தனர். 30வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் பங்குபெற்று மூவான் மான்மின் திருச்சபைக்கு விஜயம் மேற்கொண்டவர்களின் கிருபை நிறைந்த சாட்சிகளை நாம் பகிர்ந்து கொள்ளலாம்.




|பல்கேரியா| போதகர் இவான் ஹசர் பசநாவ்

## "அறிவர்.ஜேராக் லீ அவர்கள் தாழ்மையான ஒரு மனிதர். அவரது செய்தி வல்லமையுள்ளதாய் இருந்தது!"



நான் 15 கிளை சபைகளுடன் இணைந்து வேலை செய்யும் ஒரு பல்கேரிய போதகர். 2011ல் மருந்து துறை கல்லூரி பேராசிரியராக இருக்கிற எனது திருச்சபை அங்கத்தினர் ஒருவர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 8வது WCDN சர்வதேச கிறிஸ்தவ மருத்துவர் கருத்தரங்கில் பங்குபெற்றார். அந்த அங்கத்தினர் மூலமாக நான் மான்மின் ஊழியத்தைக் குறித்து கற்றறிந்தேன்.

தேவனுடைய வல்லமைக்காய் ஏங்கி கொண்டிருந்தேன். இறுதியாக மான்மின் மத்திய திருச்சபைக்கு என் முதற் விஜயம் மேற்கொண்டேன். அங்கத்தினர்கள் முழு மனதோடு தேவனை சேவித்து நித்தமும் ஜெபம் பண்ணுவதை கண்டு நான் ஆழமாய் தொடப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டேன்.

தலைமை போதகர் அறிவர்.ஜேராக் லீ அவர்கள் மிகவும் தாழ்மையானவரும், பரந்த மனப்பான்மையும் உடைய மனிதர். அவர் திரளான மக்களை நேசித்து சேவிக்கிறார். அவருடைய செய்தி மிகவும் வல்லமையுள்ளதாய் இருந்தது. அவர் கிறிஸ்தவர்களின் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையான குறிப்புகளை கற்பித்தார்.

குறிப்பாக, கல்லூரி நாட்களில் இசையை கற்ற நானும் எனது மனைவியும் இந்த 30வது ஆண்டு விழா கொண்டாட்டத்தில் விவரிக்க இயலாத கிருபையை பெற்றுக்கொண்டோம். பரலோகம் நமக்கு முன் வெளிப்படுவது போல அழகான நிகழ்ச்சிகள் பழம்புகழ் உடையதாய் இருந்தது.

மான்மினின் நிசி கச்சேரி குழுவினரும் எங்களை கவர்ந்தனர். ஏனென்றால், ஒரு திருச்சபை கச்சேரி குழு வைத்திருப்பது என்பது எளிமையானதல்ல. எங்கள் திருச்சபையின் இசைக்கு பொறுப்பாய் இருக்கின்ற என் மனைவி தேவனுடைய அன்பையும் அவரது பிரசன்னத்தையும் கலை நிகழ்ச்சிகள் முழுவதிலும் உணர்ந்து கண்ணீர் சிந்தினாள்.

தூய்மையான துதிகளும் நடனங்களும் எங்களுக்கு ஆசீர்வாதங்களை கொண்டு வந்தது. நாங்கள் இப்படிப்பட்ட தூய்மையான கலைநிகழ்ச்சிகள் தேவனுக்கு ஏறெடுக்கப்படும் காணிக்கைகள் என்பதை தெளிவாக புரிந்துகொண்டோம். இந்த கலைநிகழ்ச்சிகளை காட்டி என் திருச்சபையில் இருக்கும் வாலிபர்களுக்கும் பிள்ளைகளுக்கும் தேவன் எவ்வகையான துதிகளில் பிரியப்படுகிறார் என கற்றுக்கொடுக்க விரும்புகிறேன்.

|இந்தோனேசியா| போதகர். எல்லி டனுவிஜயா

## "நான் பரலோகத்தில் இருப்பது போன்ற சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் உணர்ந்தேன்"



எனது கணவர் லூஹம் அவர்களால் நடத்தப்படும் கவிசேஷத்தை பிரசங்கிக்கும் திருச்சபையில் நான் போதகராக உள்ளேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு, 2010ல் அவர் மான்மின் மத்திய திருச்சபையில் உள்ள எடுத்துக்கொள்ளுதலின் புகைப்படத்தை பார்த்தபின்னர், அவருக்கு இருந்த ஆஸ்துமா நோயிலிருந்து சுகம் பெற்றார்.

நாங்கள் அறிவர்.ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக்கொடுத்த கைக்குட்டையையும் (அப் 19:11–12) பெற்று அதை வைத்து திருச்சபை அங்கத்தினர்களுக்காக ஜெபிக்கிறோம். கைக்குட்டை ஜெபத்தின் மூலமாக அவர்கள் பல வியாதிகளிலிருந்து சுகம் பெற்றதை கண்டு மிகவும் சந்தோஷமடைந்தோம். அறிவர்.லீ அவர்கள் ஜெபம் "தேவனுடைய வல்லமைIV" என்ற DVDயில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் எங்களது அங்கத்தினர்கள் தங்கள் வியாதிகளிலிருந்து சுகத்தையும் தங்களது பிரச்சனைகளுக்கு தீர்வையும் பெற்றுள்ளனர்.

ஏழு வருடங்களுக்கு முன், 2005ல், எங்கள் திருச்சபை அங்கத்தினர் ஒருவர் அறிவர்.லீ அவர்களது பரலோகம் I மற்றும் நரகம் என்ற புத்தகத்தை எங்களுக்கு கொடுத்தார். அவைகளை வாசிக்கும் போது இனிவரும் உலகத்தின் மாபெரும் மெய்யான தன்மையை உணர்ந்தோம். அதிலிருந்து, நாங்கள் இப்புத்தகங்களை ஜனங்களுக்கு பரப்பி மான்மின் செய்தித்தாள்களை இந்தோனேசிய மொழியில் எங்கள் அக்கம்பக்கத்தினருக்கு வீடுவீடாய் கொடுத்தோம். அவர்களில் பலர், இப்படிப்பட்ட அற்புதங்கள் நடக்கிற திருச்சபை ஒன்று இருக்கிறது என்பது ஆச்சர்யம் என்று கூறி அகமகிழ்ந்தனர்.

கடந்த ஏழு வருட ஜெபத்துடன் மான்மினிற்கு எனது முதல் பயணத்திற்காக ஆயத்தமானேன். எனது விஜயத்தில், நான் அறிவர்.லீ அவர்களது அங்கத்தினர்களுக்கான ஆழமான அன்பை உணர்ந்து போதகராக அதிகமான கிருபையை பெற்றுக் கொண்டேன்.

30வது ஆண்டுவிழா நிகழ்ச்சிகளை பார்க்கையில், நான் பரலோகத்தில் இருப்பது போன்ற முழு அளவான சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் உணர்ந்தேன். ஒரு திருச்சபை இப்படிப்பட்ட நிகழ்ச்சியை வெளிப்படுத்த முடியுமென்பது என்னை வியப்படையச் செய்தது. அவர்களது ஆடைகளும், அலங்காரங்களும் பார்க்க கலையுள்ளதாகவும் அற்புதமாகவும் காட்சியளித்தன. எனது திருச்சபை அங்கத்தினர்களுக்கு பரலோகத்திற்கான நம்பிக்கையை கொண்டுவரும் இப்படிப்பட்ட நிகழ்ச்சியை நானும்போட ஆசை எனக்குள் வந்தது.

|அமெரிக்கா| அறிவர்.செர்கெய் மார்டினுக்

## "என்னுடைய முழு நிகழ்விலும் தேவனுடைய அன்பும் ஆண்டவருடைய கிருபையும் நிரம்பி வழிந்தது"



நான் மான்மின் மத்திய திருச்சபையைக் குறித்து 2006ல் அறிவர்.ஜேராக் லீ அவர்களது நியூயார்க் ஐக்கிய படைமுயற்சி கூட்டத்திற்கு சற்று முன்னதாக தான் அறிய வந்தேன். மூப்பர் ஜானி J.கிம் படைமுயற்சி கூட்டத்தை ஆயத்தம் செய்வதற்காக முன்னதாகவே அமெரிக்கா வந்திருந்தார். அவர் அறிவர்.ஜேராக் லீ அவர்கள் ஜெபித்ததான கைக்குட்டையை வைத்து எனக்காக ஜெபித்தார். நான் எனது வலது காலில் செய்த அறுவை சிகிச்சையினால் உண்டான பின்துயர்ச்சியிலிருந்து சுகம் பெற்றேன்.

பின்பு, நான் நியூயார்க் ஐக்கிய படைமுயற்சி கூட்டத்தில் பங்குபெற்று, அறிவர்.லீ அவர்களால் நடத்தப்பட்ட தேவனுடைய வல்லமையான கிரியைகளை கண்ணார கண்டேன். அவைகள் மூலமாக எனது கிறிஸ்தவ ஜீவியம் புதுப்பிக்கப்பட்டது. "சிலுவையின் செய்தி" என்ற அவரது செய்தியை கேட்டு நான் சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்வு நடத்தினேன்.

அநேக ஜனங்கள் நான் தேவனை விசுவாசிக்கிறேன் என்று கூறுவார்கள். ஆனால் அவர்களில் பலருக்கு எப்படி விசுவாசத்தில் வளர்வது, பரலோகத்தில் சிறந்த வாழ்விடத்தை எப்படி பிடிப்பது, பூரண இரட்சிப்பை எவ்வாறு பெறுவதென்றும் தெரியாது. இந்த உலகத்துடன் அவர்களில் பலர் ஒத்துப்போகின்றனர். இருப்பினும், அறிவர்.லீ அவர்கள் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வை நாம் நிர்வகிப்பதற்காக பரலோகத்தில் உள்ள வித்தியாசமான வசிப்பிடங்கள் மற்றும் விசுவாசத்தின் அளவு போன்ற சரியான கிறிஸ்தவ வாழ்விற்கான குறிப்பான உண்மை கருத்துக்களை நமக்கு கற்பிக்கிறார்.

மான்மின் மத்திய திருச்சபைக்கு வருகை புரிந்த எனக்கு ஒதுக்கப்பட்ட முழுநேரமும் தேவனுடைய அன்பாலும், ஆண்டவருடைய கிருபையாலும் நிறைந்திருந்தது. திருச்சபையின் அங்கத்தினர்கள் மூலமாக மெய்யான கிறிஸ்தவ ஜீவியத்தை கண்டேன். அறிவர்.லீ அவர்களது ஜெபத்தை பெறுகையில், ஆத்துமாக்களை உண்மையாய் நேசிக்கும் மெய்யான மேய்ப்பர் அவர் என்று எனக்கு வந்தது.

"பரலோகமும் பூலோகமும்" என்று தேவனருளிய துதிபாடல்கள், நடனங்கள் மற்றும் இசையினாலும் தயாரிக்கப்பட்ட 30வது ஆண்டுவிழா கொண்டாட்டத்தை பார்க்கையில் நான் சிலிர்த்துப்போனேன். இதனால், பரலோகத்திற்கான என் நம்பிக்கை வளர்ந்தது.

|ஜப்பான்| சகோதரி. யமனே கியோகோ

## "மூவான் மதுர தண்ணீர் இடத்தில் ஆவிக்குரிய உலகத்தை நான் அனுபவித்தேன்"



மான்மின் திருச்சபையைக் கண்டுபிடித்தது தான் எனக்கு என் வாழ்நாளில் நடந்த சிறந்த காரியம் என்று நம்புகிறேன். அங்கத்தினர்களின் அன்பும் நிகழ்ச்சிகளும் பரலோகத்திற்கான நம்பிக்கையை எனக்களித்தன. போதுமான அளவு என் சந்தோஷத்தை வெளியிட முடியவில்லை. குறிப்பாக, அறிவர்.ஜேராக் லீ அவர்களது ஜெபத்தால் உப்பான கடல் தண்ணீர் குடிப்பதற்கேதுவான நல்ல மதுர தண்ணீராய் மாறின (யாத் 15:25). மூவான் மதுர தண்ணீர் இடத்தில் என் விஜயத்தின்போது அதிர்ச்சியூட்டக்கூடிய கிரியைகளை அனுபவித்தேன்.

வருகைப்புரிந்திருந்த அயல்தேச 30வது ஆண்டு விழா கொண்டாட்ட விருந்தினர்களுடன் மான்மின் திருச்சபைக்கு சென்றேன். அவர்களுடைய ஆவிக்குரிய கண்களை தேவன் திறந்து அவர்களில் அநேகமானோரை ஆவிக்குரிய உலகத்தை காணும்படி செய்தார். நானும்கூட மரங்களின் இடையில் தீர்க்கதரிசிகளையும், ஆவியின் பட்டயத்தையும், தங்க நிற ஆபரணங்களையும், பரத்திலிருந்து என்னிடத்திற்கு ஒரு ஏணியையும் கண்டேன். சூரியனை சுற்றி என் பார்வையில் ஆவியின் பட்டயம் தெரிந்தது. நான் பச்சை நிறம் மற்றும் பல வருண வெளிச்சத்தையும், பெரிய மரம் போன்ற உருவில் தங்க வெளிச்சத்தையும் கண்டேன்.

நான் ஆவிக்குரிய உலகம் இருப்பதை உணரலானேன். அது பரலோகத்திற்கான மாபெரும் நம்பிக்கையை நான் பெற்றுக்கொள்ள செய்தது. மேலும், மூவான் மதுர தண்ணீர் குளத்தில் என்னை நான் ஏழு தரம் முக்கிய பின், நான் தோள்பட்டை இருக்கம், கண்களில் சோர்வு மற்றும் கால் வீக்கத்திலிருந்தும் சுகத்தைப் பெற்றுக்கொண்டேன்.

# குடிப்பழக்கம் மற்றும் போதை பழக்க அடிமைத்தனத்திலிருந்து நான் விடுவிக்கப்பட்டபடியால் என் குடும்பத்தின் மத்தியில் மகிழ்ச்சி பொங்கியது

சகோதரர் சிட்டிபாபு (ஆண்கள் ஐக்கியத் தலைவர், இந்தியாவில் உள்ள சென்னை மான்மின் திருச்சபை)



சகோதரர் சிட்டிபாபுவின் குடும்பத்தினர்

### என் குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் ஒரு வகையான பய உணர்வினாலும், வியாதியினாலும் கஷ்டப்பட்டோம்

நான் என் நாற்பது வயதுகளில் உள்ளேன். வாழ்வதற்கு வாடகை உந்து வண்டி ஓட்டி இந்தியாவில் உள்ள சென்னையில் வசிக்கிறேன். நான் குடி மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமையாய் இருந்ததால் என் மனைவி மற்றும் இரு மகன்களை பயமுறுத்தி வந்திருந்தேன். நான் குடிக்காதபோது குடியை கைவிட்ட அறிகுறியான கைநடுக்கம், பயங்கரமான தலைவலி போன்றவற்றை என்னால் தாக்குபிடிக்க முடியாது. நான் எனது மனைவியையும், மகன்களையும் கத்தியைக் காட்டி மிரட்டி, இரவு நேரங்களில் அவர்களை அடிப்பேன். எனது குடும்பம் அதிகமதிகமாக சீர்குலைந்தது.

என் மனைவிக்கு தைராய்டு வியாதி, இருதயநோய் மற்றும் போலக்யூரியா (pollakiuria) இருந்தன. அவளுக்கு சுவாச கோளாரும் இருந்தது. என்னை தவிர்ப்பதற்காக என் மூத்த மகன் வீட்டைவிட்டு சென்றுவிடுவான். அவன் அதிகபட்சமான காய்ச்சல் காரணத்தால் தன் கண் பார்வையை இழந்து கொண்டிருந்தான், தலைவலியாலும் கஷ்டப்பட்டான். எனது கடைசி மகன் தூக்கத்தில் நடக்கும் வியாதி கோளாரின் காரணமாக ஒவ்வொரு இரவும் தூங்குகையில் இங்குமங்கும் குதிரை ஓட்டம் காண்பிப்பான். குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்தோம்.

### கைக்குட்டை ஜெபத்தால், குடியையும் போதை எடுப்பதையும் விட்டு விட்டேன்

நவம்பர் 2007ல், சகோதரர் ரவி, போதகர் ஜோசப் ஹான் அவர்களை எனக்கு அறிமுகம் செய்தார். போதகர் ஹான் அவர்கள் சென்னை மான்மின் திருச்சபையில் ஊழியம் செய்கிறார். சகோதரர் ரவி, "மெரினா கடற்கரையில் 2002 இந்திய ஐக்கிய படைமுயற்சி கூட்டம் நடத்திய கொரிய செய்தியாளரால் ஊழியம் செய்யப்படுகிற திருச்சபையின் கிளை சபை ஒன்று இருக்கிறது" என்று கூறினார்.

நான் இந்துவாய் இருந்தேன், ஆனால் செய்தியாளர் அறிவர்.ஜேராக் லீ அவர்கள் கொட்டும் மழையிலும்கூட பரிசுத்த சுவிசேஷத்தை கொடுத்து, வல்லமையான கிரியைகளை வெளிப்படுத்துவதை நான் கண்டேன். இந்தியாவில் உள்ள மக்கள் அவரால் ஆழமாய் அசைக்கப்பட்டனர். ஆத்துமாக்களுக்காய் அப்படிப்பட்ட தணியாப் பற்றுடன் தேவனுடைய அன்பை அவர் பரப்பினார்.

எண்ணற்ற கிறிஸ்தவர்கள் அல்லாதோர் கிறிஸ்தவர்கள் கூட்டத்தில் பங்குபெற்றனர் என்று இப்படைமுயற்சி கூட்டம் பரவலாக அறியப்பட்டது. பங்குபெற்ற ஜனங்களின் எண்ணிக்கை 30 இலட்சமாக உயர்ந்து சரித்திர பதிவை எட்டியது.

நான் படைமுயற்சி கூட்டத்தாலும் அறிவர். லீ அவர்களாலும் ஈர்க்கப்பட்டேன். ஆகவே, மனப்பூர்வமாக சகோதரர். ரவியை பின்பற்றி சென்னை மான்மின் திருச்சபைக்கு சென்றேன். GCN தொலைக்காட்சி மூலமாக மான்மின் மத்திய திருச்சபையின் வெள்ளி முழு இரவு ஆராதனையை அங்கத்தினர்கள் ஏறெடுத்தனர். ஆராதனைக்கு பின்பதாக போதகர்.ஹான் அவர்கள் நான் சர்வ வல்லமையுள்ள தேவனை விசுவாசித்து ஆண்டவராகிய இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டு சரியான கிறிஸ்தவ வாழ்க்கையை நான் வாழ என்னை ஊக்கப்படுத்தினார். பின்பு, அறிவர். லீ அவர்கள் ஜெபித்ததான கைக்குட்டையை வைத்து எனக்காக ஜெபித்தார் (அப் 19:11–12).

ஜெபத்தை நான் பெற்று பரிசுத்த ஆவியின் அக்கினி கிரியைகளை அனுபவித்தேன். அக்கிரியைகள் மிகவும் வல்லமையாய் இருந்தது. நான் இருமுறை மயக்கமடைந்தேன். நான் சுய நினைவை திரும்ப பெற்றபோது, என் இருயத்திலும், சரீரத்திலும், சமாதானம் இருந்தது. அதற்கு மேலான ஆச்சர்யம் என்னவென்றால், கடந்த 10, 20 வருடங்களாக என்னை கஷ்டப்படுத்திய குடி மற்றும் போதை பழக்கத்திலிருந்து இறுதியாக விடுதலையாக்கப்பட்டேன்.

### என் குடும்பம் இந்துவிலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறியது

தேவனுடைய வல்லமையை அனுபவித்த பின் நான் கிறிஸ்தவத்திற்கு மாறினேன். நான் அறிவர்.லீ அவர்களது பிரதிநிதி புத்தகமான சிலுவையின் செய்தி என்ற புத்தகத்தை வாசித்து, ஏன் இயேசு மட்டுமே நமது இரட்சகர் என்று அறிந்து கொண்டேன். நான் சிலுவையில் மறைக்கப்பட்ட தேவ அருளையும், தேவனுடைய மற்றும் ஆண்டவருடைய அன்பையும் உணர்ந்ததால் என் இருதயத்தின் ஆழத்தில் அதிகமாய் தொடப்பட்டேன்.

இரண்டு வாரங்களுக்கு பின்னதாக, மீண்டும் ஒரு ஆச்சரிய செயலை நான் கடந்து வந்தேன். வெள்ளி இரவு ஆராதனையின் தெய்வீக சுகமளிக்கும் ஜெப நேரத்தில் நான் அறிவர்.லீ அவர்களது ஜெபத்தை பெற்றுக்கொண்டிருந்தேன். அச்சமயத்தில், எனக்கு எப்படி ஜெபிக்க வேண்டுமென தெரியாது, ஆகவே நான் "கர்த்தாவே, என்னை மன்னியும், கர்த்தாவே, என்னை மன்னியும்" என மீண்டும் மீண்டும் கதறினேன்.

அச்சமயத்தில் தானே வெள்ளை ஒளி நட்சத்திரம் போன்ற ஒரு ஒளி என் நெற்றி பட்டையின்மேல் விழுந்தது. அது என் சரீரம் முழுவதும் வெப்பத்தை ஏற்படுத்தக் கூடியஅளவு வலுமையானதாக இருந்தது. 2 மீட்டர் தூரத்திற்கு நான் வீசி எறியப்பட்டேன். அதன்பின் குடியை விட்ட பின்னர் ஏற்படும் கை நடுக்கம் போன்ற அறிகுறிகளிலிருந்து விடுதலைப் பெற்றேன்.

இந்த அனுபவம் என்னை புதிய மனிதனாய் மாற்றியது. எனது மாற்றத்தை கண்டு என் குடும்ப அங்கத்தினர்கள் மிகவும் மகிழ்ந்தனர். இருப்பினும்கூட, அவர்கள் அனைவரும் திருச்சபையில் பங்குபெறவில்லை. எனது மனைவி இந்து குடும்பத்தில் வளர்க்கப்பட்டாள், ஆகவே அவர்களை கிறிஸ்தவத்திற்கு மாற்றுவது எளிமையாக இருக்கவில்லை.

அச்சமயம் இடையே, போதகர். ஜோசப் ஹான் அவர்கள் என் வீட்டிற்கு விஜயம் செய்து ஜெபித்தார்கள். அவரது ஜெபத்தை என் மனைவி பெற்றபோது, அவர்கள் பரிசுத்த ஆவியின் அக்கினியைப் பெற்று இறுதியாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டார்கள். வீட்டில் வைத்திருந்த விக்கிரகங்களை அவர்கள் தூக்கி எறிந்துவிட்டு திருச்சபையில் பங்கு பெறத் துவங்கினார்கள். ஹாலேலூயா!

### குடும்பமாக சென்னை மான்மின் திருச்சபையில் பங்குபெற்று ஊக்கமாக ஜெபித்தோம்.

ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்னர், எனக்கு சமாதானம் கிடைத்தது. இருப்பினும் எனக்கு கடன் கொடுத்தவர்கள் இரவு பகலாக என் வீட்டின் கதவை தட்டினார்கள். காரணம், குடிப்பதற்கும் போதை எடுப்பதற்கும் பணங்கள் அதிகமாய் நான் செலவழித்ததால் எனது கடன் என் தலைக்குமேல் ஏறியது.

ஒரு நாள் நானும் என் மனைவியும் எங்கள் உண்மை நிலையின் காரணத்தால் சாகலாம் என கூட நினைத்துவிட்டோம். பின்பு சகோதரர் ஜோயல் அவர்கள் தன் வாழ்க்கை சம்பவத்தை குறித்து என்னோடு பேசினார். அவர் அவருக்கும் பொருளாதார கஷ்டம் இருந்ததென்றும், ஜெபித்து தேவன் மூலமாய் ஆசீர்வாதம் பெற்றார் எனவும் கூறினார். அவர் நான் தானியேல் ஜெப கூடுகைக்கு வந்து பங்கு பெறும்படி அறிவுறுத்தினார்.

எல்லாவற்றையும் சமர்பணம் செய்து தேவனிடம் ஜெபிக்க மட்டும் செய்தேன். நான் முற்றிலுமாய் மனந்திரும்பி தேவனுடைய வார்த்தையின்படி வாழ முயற்சித்தேன். என் வீட்டில், வேலை ஸ்தலத்தில், திருச்சபையில் உண்மையாய் வேலை செய்தேன்.

எனது குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் நாங்கள் GCN தொலைக்காட்சி மூலமாக சென்னை மான்மின் திருச்சபையில் அறிவர்.லீ அவர்களது செய்திகளை கேட்டோம். GCN தொலைக்காட்சி மூலமாக நாங்கள் கண்ட அற்புதங்கள், அடையாளங்கள், வல்லமையான கிரியைகள் மற்றும் ஜெபத்தை பெறுதலின் மூலமாக எங்கள் விசுவாசம் வளர்ந்தது. கூடுதலாக, போதகர். ஜோசப் ஹான் என் குடும்பத்திற்காகவும், பிள்ளைகளுக்காகவும் தேவனுடைய வல்லமை நிறைந்த கைக்குட்டை மூலமாக ஜெபித்தார்.

### எங்கள் ஆவி ஆத்துமா செழித்த போது நாங்கள் எல்லாவற்றிலும் செழித்தோங்கி நல் ஆரோக்கியத்தில் இருந்தோம்.

மே 2011ல், 10,000 ரூபாய் (216 டாலர்) நன்றி காணிக்கையை முழு இருதயத்தோடும் ஏறெடுத்தோம். அது முதல் தேவன் என் வீட்டிற்கு ஆவிக்கு ரிய மற்றும் சரீரப்பிரகாரமான ஆசீர் வாதம் கொடுத்துள்ளார். எனது மாமி யார் மற்றும் எனது அண்ணன் பிள் ளைகள் இருவர் ஜூன் மாதத்தில் நடைப்பெற்ற சிறப்பு தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் சீரான கண் பார்வையை திரும்பப்பெற்று கண்ணாடியை கழற்றி எறிந்தனர். நான் பகுதியாக ரியல் எஸ்டேட் தொழிலை துவங்கினேன். அதில், ஒரே நாளில் 45,000 ரூபாய் சம்பாதித்தேன். பிறகு, மிக குறுகிய காலத்திற்குள்ளாக என்னுடைய எல்லா கடன்களையும் நான் அடைத்து தீர்ந்தேன்.

என் குடும்பத்தினர் அனைவரும் திருச்சபை வேலையாட்களாய் மாறினோம். நான் ஆண்கள் ஐக்கிய தலைவனாகவும், எனது மனைவி பெண்கள் ஐக்கிய தலைவியாகவும் வேலை செய்கிறோம். என் மனைவி சிறுவர் ஞாயிறு பள்ளியில் ஆசிரியராகவும், சிறுவர் பாடல்குழுவின் ஆசிரியராகவும் உள்ளாள். எனது மூத்த மகன் இளம் வாலிப பணித்தளத்தில் குழு தலைவனாக இருக்கிறான். எனது இளைய மகன் வெள்ளைக்கல் பாடல் குழுவிலும், நடன குழுவிலும் அங்கத்தினனாக உள் ளான். எங்கள் சொந்தங்கள் இரட்சிக் கப்பட்டு எங்கள் திருச்சபையில் பங்கு பெறுகின்றனர்.

அழிக்கப்பட்டிருந்த எங்கள் குடும்பத்தை திரும்ப நிலைநிறுத்தி, என்னை குடி மற்றும் போதை பழக்கத்திலிருந்து விடுவித்த தேவனுக்கு எல்லா மகிமையையும், நன்றியையும் ஏறெடுக்கிறோம்.

GCN
GLOBAL · CHRISTIAN · NETWORK
Tel: 044-26172471
www.gcntv.org
e-mail: manminnewsasia@gmail.com

MIS
Manmin International Seminary
Tel: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street,
Villivakkam, Chennai - 600 049
044-26172471, 43554542



Land Mark